# இயல் 6.11 - சுற்றளவு மற்றும் பரப்பளவு

பயிற்சி எண் :: 6.11.1.1.H

சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

## சுற்றளவு - வடிவங்களின் சுற்றளவு - பயிற்சி

18 மீட்டர் நீளத்தில் சதுர வடிவில் அமைந்துள்ள அவருடைய வீட்டு மனைக்கு சுற்றுச்சுவர் அமைக்க அருளரசு விரும்பினார். ஒரு மீட்டர் நீளச்சுவர்க்கு ₹1200 செலவு ஆகும் என அவருடைய பொறியாளர் கூறினார். வீட்டிற்கு ஒரு புறம் நெடுஞ்சாலையாதலால் அப்பக்கச்சுவர் சிறிது உயரமாக இருக்க வேண்டும் என அருளரசு கூறியதால் அதற்கு ₹300 அதிகமாகச் செலவாகும் எனவும் பொறியாளர் உரைத்தார். எனில், அருளரசுக்கு அவருடைய வீட்டு மனைக்கு சுற்றுச்சுவர் எழுப்புவதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும்?

---

அருளரசின் வீட்டு மனையின் ஒரு பக்கத்தின் நீளம் = 18 மீட்டர்

சாலையோரம் உள்ள பக்கத்திற்கு 1 மீட்டருக்கு ஆகும் செலவு = 1200 (செலவு) + 300 (கூடுதல் செலவு) = ₹1500

சாலையோரம் உள்ள பக்கத்திற்கு ஆகும் செலவு ⇒ 1 × ஒரு பக்கத்தின் நீளம் × ஒரு மீட்டர் சுற்றுச்சுவருக்கு ஆகும் செலவு

சாலையோரம் உள்ள பக்கத்திற்கு ஆகும் செலவு ⇒ 1 × 18 × ₹1500 = ₹27,000

வீட்டு மனையின் மற்ற 3 பக்கங்களுக்கும் ஆகும் செலவு ⇒ 3 × ஒரு பக்கத்தின் நீளம் × ஒரு மீட்டர் சுற்றுச்சுவருக்கு ஆகும் செலவு

வீட்டு மனையின் மற்ற 3 பக்கங்களுக்கும் ஆகும் செலவு ⇒ 3 × 18 × ₹1200 = ₹64,800

வீட்டு மனையின் சுற்றுச்சுவருக்கான மொத்தச் செலவு ⇒ ₹27,000 + ₹64,800

விடை = **₹91,800**

அருளரசின் வீட்டுமனையின் சுற்றுச்சுவருக்கான மொத்தச் செலவு = **₹91,800**

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 21st March, 2022 :: 12:20 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
**https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**